2005 மார்ச் 30]

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளவழகன்.

திரு. ப. இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தொகுதியில் வி.கைகாட்டி என்ற இடத்தில் பால் குளிரூட்டும் நிலையத்திற்கான கட்டுமானப் பணி எப்போது தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களிடம் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாங்குடி கைகாட்டி என்ற பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். அதற்குண்டான நிலம் 6.3 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அந்த மாவட்டத்தினுடைய D.R.D.A.-விலிருந்து நிதியாக ரூபாய் 10 இலட்சத்தை அளித்திருக்கின்றார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அவருடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, குறிப்பிட்ட தொகையை அளிப்பதற்கு கடிதம் கொடுத்திருக்கின்றார்கள். இவற்றை வைத்து ஆரம்பக்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அங்கே மும்முனை மின்சாரம் பெறுவதற்கு மனு அளிக்கப்பட்டிருக்கின்றது. மேற்கொண்டு நபார்டு வங்கியின் மூலமாக 2 கோடி ரூபாய் கடனாகப் பெறுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 257, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

257—

மீன்வள மேம்பாடு

***53422—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த உள்நாட்டு மீன்வள மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுமா?

[2005 மார்ச் 30

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலுள்ள ஏரிகள் மற்றும் குளங்களில் தண்ணீர் வரத்து ஏற்பட்டாலும், ஏரிகள் மற்றும் குளங்களில் தண்ணீர் இருப்பு மிகவும் குறைவான கால அளவிற்கு மட்டுமே இருக்கும் என்பதால் அம்மாவட்டத்தில் ஒருங்கிணைந்த உள்நாட்டு மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவியல் ரீதியில் மீன் வளர்ப்பதை ஊக்குவிக்க பொது ஏலம் மூலம், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நமது அரசால் முன்னுரிமை கொடுத்து ஆண்டுதோறும் ஏலம் விடப்படுகின்றது. ஏரிகளில் மீன் குஞ்சுகளை வளர்த்து, மீன் பிடிப்பதில் ஒரு வருட காலத்தில் மீன்களைப் பிடிக்க முடியாத நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள். ஏரிகளில் குத்தகைதாரர்கள் வளர்த்த மீன்கள் உள்ளபோது, ஏலத்தில் போட்டியாளர்கள் குத்தகையை அதிகம் ஏற்றி ஏலம் எடுத்து, கூட்டுறவுச் சங்கங்களில் பிரச்சினைகளை உருவாக்குகின்றார்கள். எனவே குத்தகை காலத்தை ஓராண்டுக் காலம் என்பதை மூன்று ஆண்டுக் காலமாக நீட்டித்துக் கொடுத்து, மீன் உற்பத்தியைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறையின் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கட்டுப்பாட்டிலே சில குளங்கள் ஒப்பந்த அடிப்படையிலேயும், வேறு சில குளங்களை கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் அரசு வழங்கிக் கொண்டிருக்கின்றது. விதிகள் இருப்பின், அந்த ஓராண்டுக் காலம் என்பதை மூன்றாண்டுக் காலமாக உயர்த்திக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. வெங்கடாஜலம்.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் தனியார் மீன் வளர்ப்போர் அதிகரித்துள்ளார்கள். மீன் வளர்ப்புத் தொழிலை அதிகம் செய்து வருகின்றார்கள். எனவே, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், மேட்டூர் அணையில் மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு நிலையம் அமைத்து மீன்குஞ்சு வளர்ப்புப் பணிகளைச் செயல்படுத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

2005 மார்ச் 30]

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணை என்பது சேலம் பக்கத்திலே உள்ள பகுதியாகும். அந்தப் பகுதியிலே மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் இருப்பு செய்கின்ற பணிகளெல்லாம் நடைபெற்று வருகின்றன. அதற்குத் தேவையிருப்பின் அரசு அதை பரிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கனகதாரா.

செல்வி சி. கனகதாரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேரணாம்பட்டு தொகுதி, மோர்தானா அணைக்கு அருகில் வசித்து வரும் உள்நாட்டு மீனவர்களுக்கு இனிய தலைவி நல்லாட்சியில் இலவச வீடுகள் கட்டித்தர முயற்சிகள் மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர்களுக்கென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-லே ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, 500 வீடுகளைக் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள். அவர்கள் உள்நாட்டு மீனவச் சங்கத்திலே அந்த அணையிலே மீன் பிடிப்பவர்கள் member-ஆக இருந்தால், அவர்களுக்குத் தகுதி இருப்பின், வருங்காலத்திலே வீடுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 258, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

258—

TRUTH ALONE TRIUMPHS

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***22721—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பிச்சாவரம் வனப் பகுதிக்கு அருகே அமைந்துள்ள கிள்ளை பேரூராட்சியில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?